# பரதேசியா? சுதேசியா?

**நீ பரதேசியாய்த் தங்கிவருகிற கானான் தேசமுழுவதையும், உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்திரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன் என்றார். (ஆதி 17:8)**

சுதந்திரமாகக் கொடுக்கபடவிருக்கும் தேசத்தை ஆபிரகாம் வந்தடைந்திருந்தபோதிலும், ஆபிரகாமை **"பரதேசி"** என்றே வர்ணிக்கிறார் ஆண்டவர். அந்நிய தேசத்தில் இருப்பதனையே "பரதேசி" என்று அடையாளப்படுத்துகின்றது வேதம். ஆபிரகாமின் சந்ததி எகிப்து தேசத்திற்குச் செல்லவிருப்பதைச் சுட்டிக்காட்டும்போது, கர்த்தர் ஆபிராமை நோக்கி: உன் சந்ததியார் தங்களுடையதல்லாத **அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து,** அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய் (ஆதி 15:13) என்று சொன்னார். எகிப்து தேசத்தில் இருக்கும்போது உபயோகப்படுத்தப்பட்ட "பரதேசி" என்ற பதம் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தலும் உபயோகப்படுத்தப்படுகின்றதே! இதன் காரணத்தையே, இவர்களெல்லாரும், **வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை அடையாமல்,** தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, **பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும்** என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள் (எபி 11:13) என்று எழுதுகின்றார் எபிரெய ஆக்கியோன். **நாம் வைக்கப்பட்டிருக்கின்ற தேசத்தை கர்த்தருக்காகச் சுதந்தரிக்காத வரையில் நாம் வாழும் தேசத்தில் பரதேசிகளே.**

ஆபிரகாம் கானானை வந்தடைந்தபோது, கர்த்த அபிரகாமை நோக்கி: இந்தத் தேசத்தை உனக்குச் **சுதந்தரமாகக் கொடுக்கும்பொருட்டு,** உன்னை ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்திலிருந்து அழைத்துவந்த கர்த்தர் நானே என்றார் (ஆதி 15:7); என்றாலும்,

சுதந்தரிக்கவேண்டிய விசாலமான தேசத்தைக் குறித்து அல்ல, தனக்கு சந்ததி எப்போது உண்டாகும் என்பதற்குள்ளேயே முடங்கியிருந்தது ஆபிரகாமின் சிந்தை. "சுதந்தரிக்கவேண்டிய தேசத்திற்கு" அல்ல, "சுதந்தரவாளிக்கே" முக்கியத்துவம் கொடுத்தான் ஆபிரகாம். அந்நிய தேசத்தில் இருப்பதைப் போன்ற உணர்வுதான் ஆபிரகாமை ஆட்கொண்டிருந்தது. இன்றும், **அழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், நமக்கே முக்கியத்துவம் கொடுப்போமென்றால், அழைக்கப்பட்ட தேசத்தை அந்நிய தேசமாகக் கருதிக்கொண்டிருப்போமென்றால் நாமும் அவரது பார்வையில் "பரதேசிகளாகவே" காணப்படுவோம். நம்முடைய அழைப்பு ஆவிக்குரிய சந்ததிகளை உருவாக்கி, அச்சந்ததியினால் முழு தேசமும் ஆண்டவருக்குச் சொந்தமாகவேண்டும் அதுவே "சுதந்திரம்"**. ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து (எபே 2:19) என்று பவுல் எழுதுவதின் ரகசியம் இதுவே.

மேலும், **"நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது"** (பிலி 3:20) என்கிறார் பவுல். அப்படியே, அன்றியும் பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டுவருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்துகொள்ளுங்கள் (1பேது 1:17) என்று எழுதுகின்றார் பேதுரு. **அறிவிக்கப்படாத இடங்களும், அறிவிக்கப்படாத மக்களும் இன்னும் இருப்பார்களென்றால்** அழைக்கப்பட்ட பரம கானானுக்காகவே காத்திருப்போமானால் பரலோகம் போகும்வரை நாம் பரதேசிகளே என்ற சத்தியமும் நாம் புரிந்துகொள்ளவேண்டிய ஒன்று.

**பாவங்கள் மன்னிக்கப்படாவிட்டால் நாம் பரலோகத்திற்குப் பரதேசிதான்**. பாவம் நிறைந்த உலகத்தில் பரதேசிகளாக பரிசுத்தவான்கள் வாழ்ந்துவிட முடியும்; ஆனால், பாவமான மனிதர்கள் பரலோத்தில் பரதேசிகளாக நுழைந்துவிடமுடியாது. ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், எங்கள் நடுவில் ஆண்டவர் எழுந்தருளவேண்டும்; இந்த ஜனங்கள் வணங்காக்கழுத்துள்ளவர்கள்; நீரோ, **எங்கள் அக்கிரமத்தையும் எங்கள் பாவத்தையும் மன்னித்து, எங்களை உமக்குச் சுதந்தரமாக ஏற்றுக்கொள்ளும்** (யாத் 34:9) என்ற மோசேயின் ஜெபத்தின் அர்த்தம் இதுவே.